சுருக்கம்

உயர்கல்வி – தொழில்நுட்பக் கல்வி – 2011–2012–ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் நேரடி இரண்டாமாண்டு பி.இ./பி.டெக் மற்றும் முதுகலை பட்டப் படிப்பு எம்.பி.ஏ. / எம்.சி.ஏ, எம்.இ./ எம்.டெக். மாணவர் சேர்க்கையில் தமிழ்நாட்டில் பயின்ற இலங்கை அகதிகளுடைய குழந்தைகளை சேர்க்க அனுமதி – ஆணை வெளியிடப்பட்டது – திருத்தம் – வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.159 நாள் 4.7.2011

26602

ஆனி 19,
திருவள்ளுவர் ஆண்டு 2042.

படிக்கப்பட்டவை

அரசாணை (நிலை) எண்.143, உயர்கல்வி (ஜே2) துறை, நாள் 14.6.2011.

---

ஆணை:

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் பத்தி 4இல் “பொறியியல் கல்லூரிகளில் மற்ற மாணவர் சேர்க்கை முடிவுற்றபின் அனுமதிக்கப்பட்டுள்ள இடங்களுக்கு மிகாமலும், பொதுப்பிரிவின் கீழ் காலியிடங்கள் ஏதும் இருப்பின் அதில் இலங்கை அகதி மாணவர்களை சேர்க்க பரிசீலிக்குமாறும் தொழில்நுட்பக் கல்வி ஆணையரை கேட்டுக் கொள்ளலாம்” என்பதற்கு பதிலாக

**“பொதுப் பிரிவின் கீழ் தரவரிசையின் அடிப்படையில் இலங்கை அகதி மாணவர்களை சேர்க்க பரிசீலிக்குமாறும் தொழில்நுட்பக் கல்வி ஆணையரைக் கேட்டுக் கொள்ளலாம்”**

என்கிற திருத்தம் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
இயக்குநர், மறுவாழ்வுத்துறை, சென்னை–5 (தொழில்நுட்பக் கல்வி ஆணையர் வழியாக)
செயலாளர், பொறியியல் மாணவர் சேர்க்கை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25
பதிவாளர், அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழகம், சென்னை/திருச்சிராப்பள்ளி/
கோயம்புத்தூர்/திருநெல்வேலி/மதுரை.
அனைத்து பொறியியல் கல்லூரிகள் (தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25 வழியாக)

நகல்
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பொது (மறுவாழ்வு) த்துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.